படிவம் –II

அங்கீகாரச் சான்று ( Certificate of recognition)

(விதி எண்.12 கீழ் உபவிதி 4 ஐக் காண்க)

---

தந்தி:

மின் அஞ்சல்: ceoerd@gmail.com

தொலைபேசி : 0424–2256499

தொலைநிகரி: 0424–2256499

---

முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகம், ஈரோடு மாவட்டம்

மூ.மூ.எண் 5731/டி4 /2021 நாள். .11.2021

பெறுநர்

தாளாளர்,
தி நெஸ்ட் ஸ்கூல்,
மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி,
சத்தியமங்கலம் ,
ஈரோடு –638401.

அய்யா/ அம்மையீர்,

பொருள்: : அங்கீகாரம் – மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளுக்கு தற்காலிகத் தொடர் அங்கீகாரம் வழங்குதல் – தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம், 2009 மற்றும் தமிழ்நாடு விதிகள் 2011 மற்றும் தமிழ்நாடு மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் விதித்தொகுப்பின் கீழ் அங்கீகார சான்று வழங்குதல் – சார்பாக.

பார்வை:

1. அரசாணை (2டி) எண் 48, பள்ளிக்கல்வித் (எக்ஸ்2) துறை, நாள் 21.07.2004.
2. அரசாணை (பல்வகை) எண் 131, பள்ளிக்கல்வித் ( B) துறை, நாள் 10.09.2006.
3. அரசாணை(2டி) எண் 24, பள்ளிக்கல்வித் (எக்ஸ்2) துறை, நாள் 23.04.2010.
4. அரசாணை (நிலை ) எண் 270, பள்ளிக்கல்வித்(எக்ஸ்2)துறை, நாள் 22.10.2012.
5. அரசாணை (2டி) 33 பள்ளிக் கல்வித் (சி1) துறை நாள்.07.03.2013.
6. அரசாணை (நிலை) எண். 175 துறை நாள். 20.07.2017
7. ஈரோடு முதன்மைக்கல்வி அலுவலரின்செயல்முறைகள் ந.க.எண்.3290/டி1/2020 நாள்.14.10.2020.
8. அரசாணை (நிலை) எண். 101 பள்ளிக் கல்வித் (பட்ஜெட் 1)த் துறை நாள். 18.05.2018
9. அரசாணை (நிலை) எண். 167 பள்ளிக் கல்வித்துறை நாள். 07.08.2018
10. அரசாணை (நிலை) எண். 79 பள்ளிக் கல்வித்துறை நாள். 06.05.2019
11. அரசாணை (நிலை) எண். 66 பள்ளிக் கல்வித்துறை நாள். 03.08.2020
12. தாளாளர், தி நெஸ்ட் ஸ்கூல் , மெட்ரிகுலேசன் மேல் நிலைப் பள்ளி கடித நாள் 09.09.2021
13. சத்தியமங்கலம் , மாவட்டக் கல்வி அலுவலரின் கடிதம் ந.க.எண்.2791/அ4/2021 நாள் .16.09.2021

பார்வை –12இல் காணும் தங்கள் விண்ணபத்தின் தொடர்ச்சியாக தங்கள் பள்ளியினை ஆய்வு செய்து சத்தியமங்கலம் , மாவட்டக் கல்வி அலுவலரால் பார்வை–13 இல் காணும் கடிதம் மூலம் வழங்கப்பட்ட ஆய்வறிக்கையின் அடிப்படையில் ஈரோடு மாவட்டம், தி நெஸ்ட் ஸ்கூல், மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிக்கு எல்.கே.ஜி முதல் 8 வகுப்புகளுக்கு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011 இன்படியும் 9 முதல் 12 வகுப்புகளுக்கு மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் விதித் தொகுப்பின்படியும் பார்வை–8இல் உள்ள அரசாணையில் வழங்கப்பட்டுள்ள அதிகார வரப்பிற்குட்பட்டும், மற்றும் கீழ்க்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு தற்காலிக அங்கீகாரம் வழங்கப்படுகிறது என இதன் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

தபிபா

| பள்ளியின் பெயர் | அங்கீகாரம் வழங்கும் வகுப்புகள் | | அங்கீகாரம் வழங்கும் காலம் | | பயிற்று மொழி (Medium of instruction) |
|---|---|---|---|---|---|
| | முதல் | வரை | முதல் | வரை | |
| தி நெஸ்ட் ஸ்கூல், மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி, சத்தியமங்கலம் , ஈரோடு –638401. | எல்.கே.ஜி | 12 | 01.06.2021 | 31.05.2022 | ஆங்கிலம் |

பள்ளி அங்கீகாரக் குறியீட்டு எண் 09-M-006-0518

1. இப்பள்ளி குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச்சட்டம் 2009 மற்றும் தமிழ்நாடு இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச்சட்ட விதிகள் 2011, ஆகியவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிவகை / காப்புரைகளுக்கு கட்டுப்பட வேண்டும்.
2. பள்ளியில் நுழைவுநிலை வகுப்பில், அருகாமை பகுதியில் உள்ள நலிவடைந்த / வாய்ப்புகள் மறுக்கப்பட்ட பிரிவினருக்கு, வகுப்பில் மொத்த சேர்க்கையில் 25% க்கு குறையாமல் சேர்க்கை செய்யப்பட்டு 8ம் வகுப்பு முடிக்கும் வரை அவர்களுக்கு இலவசக் கட்டாயக் கல்வி அளிப்பதை உறுதி செய்ய வேண்டும்.
3. கட்டிட உறுதிச் சான்று –கட்டிட உரிமம் சான்று –சுகாதாரச் சான்று மற்றும் தீயணைப்பு மற்றும் மீட்பு பணித்துறையின் தடையின்மை சான்றுகளின் காலம் முடிவடையும் முன்னர் புதுப்பிக்க வேண்டும், மேற்குறிப்பிட்டுள்ள சான்றுகள் இல்லாத கட்டிடங்களில் வகுப்பறை –பள்ளி இயங்ககூடாது என்றும், இதனால் ஏற்படும் பின் விளைவுகளுக்கு பள்ளித் தாளாளர் /செயாளரே முழுப்பொறுப்பேற்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.
4. கட்டிட உறுதிச் மற்றும் கட்டிட உரிமச் சான்றில் நிர்ணயிக்கப்பட்டுள்ள மாணாக்கரின் எண்ணிக்கைக்கு மேல் எக்காரணத்தைக் கொண்டும் கூடுதல் சேர்கை இருத்தல்கூடாது.
5. எப்போதும் அரசின் நிதி உதவி வழங்கப்படமாட்டாது.
6. பள்ளியில் கல்வி கட்டணத் தொகை ஈடு செய்ய ஏதுவாக "பள்ளி முதல்வர்" என்ற பதவிப் பெயரில் தனியாக வங்கி கணக்கு பராமரிக்க வேண்டும்.
7. பெற்றோர்களிடமிருந்து நன்கொடை (captitation) ஏதும் வசூலிக்கக் கூடாது. மேலும் குழந்தைகளுக்கு சேர்க்கை நிமித்தம் எவ்வித எழுத்துத் தேர்வோ / நேர்காணலோ (oral interview) நடத்தக்கூடாது.
8. எந்த ஒரு குழந்தைக்கும், (a) பிறப்புச் சான்று அளிக்காத காரணத்திற்காகவோ, (b). சாதி, இன, மத அடிப்படையிலோ அல்லது பிறந்த இடம் அடிப்படையிலோ, வேறு காரணத்திற்காகவோ சேர்க்கை மறுக்கப்படக் கூடாது.
9. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச்சட்டம் 2009, விதி 23(1)ன்படி எல்.கே.ஜி. முதல் 8 வகுப்பு வரை கற்பிக்கும் ஆசிரியர்கள் குறைந்தபட்ச கல்வி மற்றும் தொழிற்கல்வி தகுதியுடன் ஆசிரியர் தகுதி தேர்விலும் தேர்ச்சி பெற வேண்டும். இத்தகுதி பெறாதவர்கள் முழுத்தகுதி பெற்ற ஆசிரியர்களாக கருதப்பட மாட்டார்கள். 9 முதல் 12 வகுப்புவரை கற்பிற்கும் ஆசிரியர்கள் மெட்ரிகுலேசன் பள்ளிகளை ஒழுங்குபடுத்தும் விதித் தொகுப்பில் குறிப்பிட்டுள்ள குறைந்தபட்ச கல்வித் தகுதி பெற்றிருக்கவேண்டும்.
10. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 அதற்கான தமிழ்நாடு விதிகள் 2011 கீழ்க்குறித்த கீழ்க்காணும் காரணிகளை பள்ளி நிர்வாகம் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
    (அ) சேர்க்கை செய்யப்பட்ட எந்த ஒரு குழந்தையையும் தொடக்கக்கல்வி (VIII– ஆம் வகுப்பு ) முடிக்கும் வரை நீக்கம் செய்யக் கூடாது.
    (ஆ) எந்த ஒரு குழந்தையையும் உடல் ரீதியான / மன ரீதியான துன்புறுத்தலுக்கு ஆட்படுத்தக் கூடாது.
    (இ) தொடக்கக் கல்வி முடியும் வரை குழந்தைகளை எவ்வித பொதுத் தேர்வுகளுக்கும் ஆட்படுத்தக்கூடாது.
    (ஈ) தொடக்கக் கல்வியினை நிறைவு செய்யும் குழந்தைகளுக்கு விதி எண். 21 (ல்) தெரிவிக்கப்பட்டவாறு சான்று அளிக்கப்பட வேண்டும்.
    (உ) மாற்றுத் திறனாளி குழந்தைகள் / சிறப்பு கவனம் அளிக்கப்பட வேண்டிய குழந்தைகளுக்கு உரிய விதித் தளர்வுகளுடன் சேர்க்கை அளிக்கப்பட வேண்டும்.
    (ஊ) விதி எண். 23(1) ன்படி குறைந்தபட்ச முழுக்கல்வித் தகுதி பெற்ற ஆசிரியர்களே பணியில் அமர்த்தப்பட வேண்டும்.
    (எ) குறைந்தபட்ச முழுக் கல்வித் தகுதி பெறாத ஆசிரியர்கள் இச்சட்டம் செயல்முறைக்கு வந்த நாளான 01.04.2010 முதல் 5ஆண்டுகளுக்குள் தேர்ச்சி பெற வேண்டும்.
    (ஏ) விதி எண்.24 உப விதி (1) ன் கீழ் வரையறுக்கப்பட்டவாறு ஆசிரியர்கள் தங்கள் பணியினை மேற்கொள்ள வேண்டும். எந்த ஒரு ஆசிரியரும் தனிப் பயிற்சி (tuition) வகுப்பு எடுத்திட பள்ளி நிர்வாகம்அனுமதிக்கக் கூடாது
11. தமிழ்நாடு பள்ளிக்கல்வி பொதுக்கல்வி வாரியத்தால் ஒப்பளிக்கப்பட்ட பாடத்திட்டங்கள் மற்றும் அரசு ஆணை எண்.143 ப.க.(எக்ஸ்2) துறை நாள்.19.09.2011ல் வரையறுக்கப்பட்ட முப்பருவ பாடமுறை மற்றும் தொடர் முழு மதிப்பீட்டு முறை பள்ளிகளில் தவறாது பின்பற்ற வேண்டும்.
12. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 சட்டபிரிவு 19ல் தெரிவிக்கப்பட்ட வரையறை மற்றும் தரங்களை (norms & standards) பள்ளிகள் தவறாது கடைபிடிக்கப்பட வேண்டும்.

14. பள்ளி வளாகத்திலோ அல்லது வெளியிடத்திலோ பள்ளியின் பெயரால் அங்கீகாரம் பெறாத பள்ளிகள் ஏதும் செயல்படக்கூடாது.
15. தமிழ்நாடு பதிவு பெற்ற சங்கங்கள் விதி 1975ன் படி ஒரு சங்கமாகவோ அல்லது பதிவு பெற்ற அல்லது நடைமுறையிலுள்ள சட்டபடி அமைக்கப்பட்ட பொது அறக்கட்டளையால் பள்ளி நிர்வகிக்கப்பட வேண்டும்.
16. பள்ளி தனி நபர் இலாபத்திற்கோ, குழுக்களின் லாபத்திற்கோ அல்லது கூட்டு நபர்கள் லாபத்திற்கோ செயல்படல்கூடாது.
17. பள்ளி வரவு செலவுக் கணக்குகள் பட்டயக் கணக்காயரால் முறைப்படி ஆய்வு செய்து அதன் நகல் அதிகார பூர்வ அலுவலருக்கு அளித்தல் வேண்டும். இக்கணக்குகள் ஆண்டுதோறும் அங்கீகாரம் அளித்திட அதிகாரம் பெற்ற அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்படவேண்டும்.
18. பள்ளி அங்கீகார குறியீட்டு எண் அனைத்து கடிதத் தொடர்பிலும் தவறாது குறிப்பிடப்பட வேண்டும்.
19. மாணவர்கள் பாதுகாப்பு நலன் குறித்து அரசாணை எண்.727.உள் (போக்குவரத்து –7)துறை நாள்.30.09.2012 மற்றும் பள்ளி வாகன சிறப்பு விதி 2012ல் தெரிவித்துள்ள நடைமுறைகள் மற்றும் இயக்குநரால் வழங்கப்பட்ட அறிவுரைகள் தவாறது கடைபிடிக்கவேண்டும்.
20. துறையால் அவ்வப்போது கோரப்படும் அறிக்கைகள் / தகவல்களையும் பள்ளி நிர்வாகம் உடனுக்குடன் அனுப்பி வைக்கவேண்டும். பள்ளி அங்கீகாரத்தை நிறைவு செய்திடவும் / பள்ளி நடைமுறையில் எழும் சிக்கல்களை நிவர்த்தி செய்து பள்ளி தொடர்ந்து நடைபெற நிர்வாகத்தால் / அரசால் அவ்வப்போது வழங்கப்படும் அறிவுரைகளை பள்ளி நிர்வாகம் கண்டிப்பாக கடைபிடிக்கவேண்டும்.
21. இவ்வாணையில் கூறப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், மற்றும் வரையறைகள் மற்றும் அங்கீகாரத்திற்கு விதிக்கப்பட்ட நிபந்தனைகளை மீறியதாக கண்டறியப்படும் பட்சத்தில் இந்த அங்கீகார ஆணை திரும்ப பெறப்படும்.
22. மெட்ரிகுலேசன் விதித் தொகுப்பு விதி எண்.14 உபவிதி (3)ன்படி ஒரு வகுப்பில் அதிகபட்சமாக 4 பிரிவுகள் மட்டும் செயல்படவேண்டும். கூடுதலாக 1 பிரிவு முதன்மை கல்வி அலுவலரின் அனுமதி அளித்தால் மட்டுமே தொடங்கப்படவேண்டும்.
23. இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009 ன்படி எல்கேஜி முதல் 5வகுப்புகள் வரை ஒவ்வொரு பிரிவிலும் அதிகபட்சமாக 30 மாணவர்கள்,6முதல்8வகுப்புகள் வரை அதிகபட்சமாக 35 மாணவர்கள் மட்டுமே சேர்கை செய்யப்பட வேண்டும். 9 முதல் 12வகுப்புகளில் தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஒழுங்குபடுத்தும் விதித்தொகுப்பில் குறிப்பிட்டவாறு 50 மாணவர்கள் வரை சேர்க்கை செய்யலாம்.
24. தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணங்கள் வசூலித்தலை ஒழுங்குபடுத்துதல்) சட்டம் 2009 இன்படி பள்ளிக்கு கட்டண நிர்ணயக்குழு நிர்ணயித்த கட்டணம் மட்டுமே மாணவர்களிடமிருந்து கட்டணமாக வசூலிக்கவேண்டும்.
25. பள்ளிகளில் பாதுகாப்பு நலன் கருதி கடைபிடிக்கப்பட வேண்டிய நெறிமுறைகள் சார்ந்து அரசு வெளியிட்டுள்ள அரசாணை எண்131 பள்ளிக் கல்வி (எக்ஸ்–2) துறை, நாள்.10.09.2006ல் தெரிவிக்கப்பட்டுள்ளது அந்நெறிமுறைகளைத் தவறாமல் பின்பற்றவேண்டும். மேலும் துறையால் அவ்வப்போது வழங்கப்படும் அறிவுரைகள், நிபந்தனைகள் அனைத்தும் பள்ளியின் நிர்வாகத்தால் தவறாது கடைப்பிடிக்கப்பட வேண்டும்.
26. எல்.கே.ஜி முதல் 3 வகுப்புகள் வரை தரைத் தளத்தில் மட்டுமே செயல்படவேண்டும்.
27. இப்பள்ளி வளாகத்தில் இப்பள்ளி செயல்பாட்டினைத் தவிர வேறு கல்வி நிறுவனமோ அல்லது குடியிருப்புகளோ வியாபார நோக்கு கொண்ட எந்த கடைகளோ அல்லது வேறு எந்த நிறுவனமோ செயல்படக் கூடாது.
28. மாற்றுத் திறன் குழந்தைகளுக்காக சாய்தளம் (ramp) மற்றும் கைப்பிடிமான (handrails) வசதிகள் பள்ளி மற்றும் கழிப்பறைகளில் ஏற்படுத்தப்படவேண்டும்.
29. இப் பள்ளியில் பயிலும் அனைத்து மாணாக்கருக்கும் முழுமையான பாதுகாப்பு அளிப்பது பள்ளித் தாளாளர் மற்றும் பள்ளி முதல்வரின் கடமையாகும். இதில் தவறினால் ஏற்படும் பின்விளைவுளுக்கு நிர்வாகமே முழுப்பொறுப்பேற்க வேண்டும்.
30. இந்தத் தற்காலிகத் தொடர் அங்கீகாரம் முடிவடையும் நாளுக்கு, மூன்று மாதங்களுக்கு முன்னரே தொடர் அங்கீகாரம் கோரும் கருத்துரு உரிய அனைத்து விவரங்கள் மற்றும் இணைப்புகளுடன் கீழே ஒப்பமிட்டவருக்கு சமர்ப்பிக்கப்படவேண்டும்.
31. அரசாணை எண். 270, ப.க.துறை நாள் 22.10.2012ல் உள்ள அனைத்து நிபந்தனைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.
32. தமிழ்நாடு தமிழ்கற்பதற்கான சட்டம் 2006ன்படி ஒன்று முதல் 10ஆம் வகுப்பு வரை பகுதி–1இல் தமிழ் மட்டுமே மொழிப்பாடமாக கற்பிக்கப்பட வேண்டும்.
33. நகர் மற்றும் ஊரமைப்புத் துறையின் ஒப்புதல் பெற்ற பள்ளிக் கட்டிட வரைபட நகல் சமர்ப்பிக்கப்படவேண்டும்.
34. பள்ளிக்கட்டண நிர்ணயக்குழு ஆணை புதுப்பித்து ஆய்வுக்கு முன்னிலைப்படுத்த வேண்டும்.

தி நெஸ்ட் ஸ்கூல், மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி,
சத்தியமங்கலம் ,

முதன்மைக் கல்வி அலுவலர்
ஈரோடு

நகல்– மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர் அவர்களுக்குபணிந்தனுப்பப்படுகிறது.
நகல்– மாவட்டக் கல்வி அலுவலர், சத்தியமங்கலம்(தகவலுக்காக அனுப்பலாகிறது.)
(அங்கீகார ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறைகள் தொடர்ந்து பின்பற்றப்படுவதை ஆய்வின் போது உறுதிசெய்ய கேட்டுக்கொள்ளப்படுகிறது)